30th October 1957]

நினைக்கிறதை, அது சட்டத்திற்கு புறம்பாயிருந்தாலும் அதைச் செய்யலாம் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். இந்த நோக்கத்தில்தான் அவர் பிரச்னையைப் பார்க்கிறார்கள். சட்டப்படி சில கஷ்டங்கள் இருந்தாலும் சட்டத்தை அனுசரித்துத்தான் நடக்கவேண்டுமென்பது எங்களது கொள்கை. சட்டத்தை மீறினால் அதற்குள்ள தண்டனையை அனுபவித்துத் தான் தீரவேண்டும். கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது ; அது பின்னால் வரப்போகிறது ; ஆகவே இப்பொழுது யார் வேண்டுமானாலும் பிறர் கட்டிடத்தை பாம்ப் வைத்துத் தகர்க்கலாம் என்ற மட்டில் இருந்தால் அது இந்தச் சிலையோடு நிற்காது வேறு விதங்களில் கொண்டுபோய்விடும்.

Sri K. VINAYAKAM : நான் எதிர்க்கட்சிக்காரனாய் இருந்தது கடந்த சரித்திரம். அதைப் பூராவும் நான் மறந்துவிட்டேன். இப்பொழுது நான் காங்கிரஸ் கட்சிக்காரன்தான். நூற்றுக்கு நூறும் காங்கிரஸ் கட்சிக்காரன்தான், என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் என்றோ அல்லது காங்கிரஸ்காரர்கள் என்ற பாகுபாடு செய்து கொண்டு கேள்வி கேட்பதாக நமது சட்டம் சொல்லவில்லை. எது நல்லதோ அதைக் கேட்கலாம். கட்டபொம்மனை தமிழ்நாடு மக்கள் விரும்புவதால், திப்பு சுல்தானைப்பற்றி ஓய்வு பெற்ற ஒரு அரசியல் வாதி எடுத்துச் சொல்வதால் மக்கள் விரும்புவதை ஏன் மறுக்கவேண்டும் என்று சொன்னேனே ஒழிய அரசியல் சிக்கலை உண்டாக்குவதற்காக சொல்லவில்லை.

Sri M. KALYANASUNDARAM : அந்நியர்களின் சிலைகள் அகற்றப்படுவது சென்னை நகரம் சம்பந்தப்பட்ட மட்டிலுந்தானா ? இல்லை வேறு இடங்களில் உள்ள சிலைகளையும் அகற்ற நடவடிக்கைகள் எடுப்பார்களா ? உதாரணமாக, திருச்சி ரயில்வே ஜங்ஷனுக்கு முன்பு இருக்கும் ஸர் பர்லி ரோத்ராவின் சிலை 1928-ல் பல ரெயில்வே தொழிலாளர்களையும் கொலை செய்து பழி வாங்கிய ஒரு அதிகாரியின் சிலையாகும். ரெயில்வே தொழிலாளர்களுக்கு அதைக் கண்டாலே ஆத்திரம் வருகிறது. மற்ற சிலைகளோடு இச்சிலையும் அகற்றப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது சென்னை நகரத்திற்கு மட்டுமல்ல. இது ராஜ்யம் பூராவிற்கும் உள்ள கொள்கையாகும். அப்படி ஒரு சிலை இருப்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு அங்கத்தினருக்கு எனது நன்றி.

Mr. SPEAKER : அடுத்தபடியாக கேள்வி 32. 33-வது கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

Bird sanctuaries

* 32 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of bird sanctuaries in the State ; and

(*b*) the amount spent on them in 1956?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The answer [a] is placed on the table.

* 33 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of bird sanctuaries in the State; and

(*b*) the types of birds that are in those sanctuaries?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Please see answer to Question No. 32.

[a] Printed as Appendix on page 339 infra.

[30th October 1957

SRI N. K. PALANISAMI: இம்மாதிரியான "பேர்ட்ஸ் ஸாங்க்ச்சுவரீஸ்"-யை அதிகப்படுத்த சர்க்காருக்குத் திட்டமிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலிலே, சென்னைக்கு அருகில் இருக்கிற "போட்ஸ் ஸாங்க்ச்சுவரி"-யை விஸ்தரிப்பதில் இப்பொழுது அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. இம்மாதிரியான பேர்ட்ஸ் ஸாங்க்ச்சுவரீஸ்-யை நமக்கு வேண்டியபோது உண்டாக்கிக்கொள்ள முடியாது.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே சில அபூர்வமான இனங்கள் மாண்டுகொண்டிருக்கின்றன. இவைகள் சரியாக வளரவில்லை என்று சொல்லப்படுகிறது. விசேஷ பாதுகாப்பு அவைகளுக்கு அளிக்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. முதலிலே அங்கு தண்ணீர் வசதி போதாது. ஆனால் அதை விஸ்தரிப்பதினால் நீர்ப்பாசன வசதிக்குறைவால் மக்கள் பாதிக்கப்படக்கூடாது. அதையெல்லாம் பரிசீலனை செய்து வருகிறது. அதோடு அங்கிருந்து 30 மைல் தூரத்திற்கு யாரும் சுடக்கூடாது என்று உத்தரவு அனுசரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அதுபற்றி அரசாங்கம் பல வகைகளிலும் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

SRI N. K. PALANISAMI : இதற்காக இந்த சர்க்கார் எவ்வளவு செலவு செய்திருக்கிறது ? மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது மான்யம் கிடைத்திருக்கிறதா ?

9-30 a.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவரை அரசாங்கம் செலவு செய்யவில்லை. இதற்கென்று விஸ்தரிக்கப்பட்ட ஒரு திட்டத்தை மத்திய சர்க்காரின் உதவியோடு செலவு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே சில குறிப்பிட்ட பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதால் அங்குள்ள தண்ணீரில் இவைகளெல்லாம் விழுந்து அசுத்தமாகி வியாதி பரவி வருகிறது. இதனால் அனேக பறவைகள் மாண்டு வருகிறது, என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்விதம் எனக்கு தகவல் இல்லை. இந்த விதமாக இருக்கிற தண்ணீரிலிருந்து கிடைக்கும் வண்டல்கள் விவசாயத்திற்கு நல்ல உரமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

Post-graduate basic training college

* 34 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open a post-graduate basic training college; and

(*b*) if so, the subjects to be taught therein?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A Government post-basic training college was opened at Orathanad, Tanjore district, in July 1957.

(*b*) The subjects taught in the college are according to the syllabus of the University.